மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.213/2021</u>

2025ம் ஆண்டு நவம்பர் 03ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஈஸ்வரமூர்த்தி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>03.11.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் தகப்பனார் கெட்டிமுத்துகவுண்டர் மற்றும் என் தகப்பனாரின் தகப்பனார் நாச்சிமுத்துகவுண்டர் மற்றும் 1ம் பிரதிவாதி நடராஜன் ஆகியோர்கள் 1973 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணம் தான் இந்த வழக்கின் தாவா சொத்திற்கும், தாவா தடத்திற்கும் மூல ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் ஏ,பி ஷெட்யூல் தாரர்கள் நடந்து கொள்வதற்கும் தண்ணீர் பாய்ச்சி கொல்வதற்கும் மட்டும்தான் உரிமை கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அப்போதெல்லாம் நடந்துதான் ஆடு, மாடுகளை கொண்டு சென்றார்கள் தற்போது தான் வண்டி வாகனம் ஓட்டி செல்கிறார்கள் 1973 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தில் நடந்து கொள்ள மட்டும் தான் தடவழி உரிமை கொடுக்கப்பட்டுள்ளது என்றும் வண்டி

வாகனங்கள் ஓட்டி சொல்வதற்கு பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நான் சொல்வது போல், நான் சொல்லும் இடத்தில் எந்தவித தடமும் நிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் வண்டி தடை பயன்பாடு எந்த காலத்திலும் நிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதில் வண்டி வாகனங்கள் சென்று வந்து கொண்டிருக்கிறது 2010 ஆம் ஆண்டு நாங்கள் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் வா.சா.ஆ.3 ஆவணமான 1973 பாகப்பிரிவினை ஆவணத்திற்கும் முரணான சங்கதிகள் கண்டு 2010 பாகப்பிரிவினை ஆவணத்தில் நாங்கள் எழுதிக் கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

3. நாங்கள் செய்து கொண்டுள்ள பாகப்பிரிவினை ஆவணத்தில் பிரதிவாதிகள் தரப்பினர்களாகவோ சாட்சிகளாகவோ இல்லை என்று சொன்னால் சரிதான் இல்லாத உரிமையை திட்டமிட்டு தடத்தை அகலப்படுத்தி காண்பிக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் எங்களால் வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில் பத்தடி தடம் என்று எழுதிக் கொண்டுள்ள தடம் எதுவும் நிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 1973 பாகப்பிரிவினை ஆவணத்தில்

கா.ச.எண்.182 இல் கிணறு இத்தனை சென்ட் விஸ்தீரனத்தில் உள்ளதாக குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை சரிதான்.

4. கிணறு, பொது இடம் மற்றும் தென்னை மரங்கள் உள்ளதாக மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது. க.ச.எண்.182 பூமியில் எனக்கு எந்தவித அடிநில பாத்திய உரிமை பூமியை பொறுத்து இல்லை என்று சொன்னால் சரிதான். எங்களுக்கு எவ்வித அடிநில பாத்தியமும் உரிமையும் இல்லாத க.ச.எண்.182 பூமியை பொறுத்து நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில் கிணறு வித்தியானத்துடன் உள்ளதாக குறிப்பிட்டு எழுதி உள்ளது செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்குறையில் சொல்லி உள்ளபடி க.ச.எண்.182 பூமியில் உள்ள கிணற்றிலிருந்து எவ்வித பைப்லைனும் எனது பூமிக்கு நிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் உண்மைக்கு மாறாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

5. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் எங்கள் விருப்பப்படி மூல ஆவணங்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அதைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் மட்டும் கோரி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள பட சங்கதிகள் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் எனது கூற்றுப்படி தவறான பகுதிகளை

பார்வையிட்டு தவறான அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

6. எனக்கு உரிமை இல்லாத மற்றும் எனது அனுபவத்தில் இல்லாத சொத்துக்களை பொறுத்து நான் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் உரிமை கோருகிற இடத்தில் எனக்கு ஆவணப் படி மற்றும் அனுபவ படியும் எவ்வித பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு காலையில் உள்ள கிணற்றிலிருந்து, வேறு காலையில் உள்ள பூமிகளுக்கு தண்ணீர் எடுத்து பாசனம் செய்ய முடியாது என்று சொன்னால் 1973 பாகசாசனத்தின் அடிப்படையில் உரிமை உள்ள நிலங்களுக்கு தான் நீர் பாசனம் செய்து வருகிறோம்.

7. க.ச.எண்.182 காலையில் பிரதிவாதிகளுக்கு 1973 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் புஞ்சை ஏக்கர் 1.08 நிலம் பாத்தியம் என்று சொன்னால் சரிதான். வருவாய்த்துறை ஆவணங்களில் ஏற்பட்டுள்ள தவறுகளை வைத்துக்கொண்டு நான் இந்த வழக்கில் எவ்வித பரிகாரமும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு பிரதிவாதிகள் பைப் லைனை உடைத்தார்கள் என்றும் தட பகுதியை தடை செய்தார்கள் என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் பைப் லைனை உடைத்தது மற்றும் தடத்தை தடை செய்தது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் ஆமாம்.

8. நான் பொய்யான அமைப்புகளை வைத்துக் கொண்டு பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் உரிமை கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.03 19:10:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்